பேருந்து சாலையைப் போடுகிற சூழ்நிலை இல்லை. ஆகவே, புனே ஆராய்ச்சிக் குழு கொடுத்திருக்கிற அறிக்கையைப் பெற்று, நிதியொதுக்கீடு உடனடியாக கொடுத்து, எவ்வளவு தொகை என்று பார்க்காமல், எவ்வளவு கோடி என்று பார்க்காமல், செய்யவேண்டும். திருவொற்றியூர் பகுதியில் இருக்கிற 5 லட்சம் மக்கள் இன்றைக்கு அச்சத்திற்குள்ளாகி இருக்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவே இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகச் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12-20

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல அந்த பகுதியில் இருக்கிற அனைத்து மக்களும் என்று சொல்லமுடியாது. ஒரு பகுதியில் இருக்கிற மக்கள். அவர்கள் குறைந்த அளவில் இருக்கிறார்களா அல்லது அதிக அளவில் இருக்கிறார்களா என்ற பிரச்சினை இல்லை. அவர்கள் 5 லட்சம் பேர் என்றாலும் அல்லது 5 பேராக இருந்தாலும் இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் நாம் ஒன்றாகத் தான் எண்ணி நடவடிக்கை எடுக்க முடியும். மக்களுக்கு பாதிப்பு என்ற வகையில் அதை பார்க்க முடியும் என்ற அடிப்படையில்தான் இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்றைக்குக்கூட நீங்கள் பார்த்திருப்பீர்கள். வேலைகள் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கிரேன்களை வைத்து வேலை செய்கிற படங்கள் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. கடலரிப்பைத் தடுப்பதற்காக முனைப்பாக நம்முடைய பொதுப்பணித் துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும், இயற்கையின் சீற்றத்திற்கு ஆளாகிறபோது பல்வேறு சங்கடங்களை இந்த அரசு எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இது ஒரு மிகப்பெரிய பிரச்சினை. அவர்கள் தெரிவித்ததைப் போன்று உடனடியாக தீர்க்க முடியாத பிரச்சினையாக இருப்பதால்தான் இப்போது சில நடவடிக்கைகள் மூலம் இதைத் தடுத்துக் கொண்டிருக்கிறோம். இதை நிரந்தரமாக தீர்க்கவேண்டும் என்பதில் இந்த அரசுக்கு கருத்து மாறுபாடு கிடையாது. பல கோடிக்கணக்கான ரூபாயில்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். ஆகவே இதற்கு ஆய்வு செய்து முறையாக டெக்னிக்கல் அட்வைஸ் வேண்டியிருக்கிறது. ஏதாவது ஒரு முறையில் நாம் செய்கிறபோது மறுபடியும் அலை அடிக்கிறபோது அது பாதிக்கப்பட்டு விட்டால் செய்த திட்டம் பெயிலியூர் ஆகிவிட்டது என்று குற்றச்சாட்டு வரும். ஆகவே அதற்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்குத் தான் தொழில்

நுட்ப ஆலோசனை கேட்டிருக்கிறோம். அதை நிச்சயமாக பெற்றவுடன் அதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும். அந்தப் பகுதி மக்களின் உணர்வுகளை இந்த அரசு புரிந்திருக்கிறது. டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் புரிந்து இருக்கிறார்கள். அது சம்பந்தமாக தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) **விதி 55-இன் கீழ் அனுமதிக்கப் பெற்று கூட்டத் தொடர் இறுதி நாளன்று அவைமுன் வைக்கப் பெற்ற கவன ஈர்ப்பு (1 முதல் 12 வரை இணைப்பு-2ஆக சேர்க்கப் பெற்றுள்ளன).**

4. தகவல் கோரல்

அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையை எழுப்புதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். (குறுக்கீடு)

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். தலைவர் அவர்கள் நிராகரித்து விட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது எப்படி இதிலே பேச முடியும்? (குறுக்கீடு) எனக்கு இது என்ன முறை என்றே தெரியவில்லை. மூத்த உறுப்பினர் என்கிறீர்கள்...(குறுக்கீடு) இது முறையல்ல, எப்படி முடியும்? நான் நிராகரித்து இருக்கிறேன். நிராகரித்ததை-- நான் அதற்குப்பிறகு வேறு பிரச்சினைகளை எடுத்துக்கொண்டு, கவன ஈர்ப்பை எல்லாம் முடித்ததற்கு பிறகு--இப்போது நான் இப்படித்தான் பேசுவேன் என்று சொன்னால் என்ன முறை? (குறுக்கீடு)

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: முறையில்லைதான்....